சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **224 / 2022**

பெயர்: பாஸ்கர் வா.சா.1 தேதி **19.09.2025**

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. தாவா சொத்து உள்ள ஊர் தான் எனது சொந்த ஊர். மூன்றாவது பிரதிவாதியின் தகப்பனார், இரண்டாவது பிரதிவாதி. இரண்டாவது பிரதிவாதியின் தகப்பனார் முதல் பிரதிவாதி. முதல் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் ராமசாமி என்றால் எனக்கு தெரியாது. எங்கள் ஊரில் வெள்ளைசாமி மகன் ராஜு என்பவரை தெரியுமா என்றால் தெரியும். அவர் எனக்கு பழக்கமானவரா என்றால் பழக்கமானவர் தான். எனக்கு அவருக்கு விரோதம் எதுவும் இல்லை. போலாச்சி ரெட்டியார் மனைவி எஜ்ஜம்மாள் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண். 460/18ல் எத்தனை உட்பிரிவுகளானது என்கின்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி சர்வே எண். 460/18ல் 460/18 A, 460/18 B, 460/18 C என உட்பிரிவு ஆகியுள்ளது என்றால் சரிதான்.

2. மேற்படி சர்வே எண். 460/18B-ல் யூடிஆர்- க்கு முன்பு யார் பெயரில் பட்டா இருந்தது என்று தெரியுமா என்றால் தெரியும். 460/18 என்பது யூடிஆர் -க்கு முன்பு 373 என்ற எண் கொண்ட பட்டா வெள்ளைசாமி, போலாச்சி பெயரில் இருந்து என்றால் எனக்கு தெரியாது. இரண்டாவது பிரதிவாதி ஆர்.டி.ஓ-விடம் வழக்கு சொத்தை பட்டா மாற்றம் செய்வதற்காக மனுக்கொடுத்தாரா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. நான் இந்த வழக்கு சொத்து சம்மந்தமாக எனது பெயருக்கு பட்டா மாற்றுவதற்காக ஆர்.டி.ஓ-விடம் மனுக்கொடுத்தேனா என்றால் இல்லை. செட்டில்மெண்ட் ஆவணத்திற்கு பின்னிட்டு எனது பெயருக்கு முழுமையாக பட்டா மாறவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் விற்பனை செய்ததாக கூறக்கூடிய நபர்களுக்கு மேற்படி சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்று சொன்னால் பூர்விகம் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணம் நல்லப்பரெட்டியர் வகையறாவால் எழுதிக்கொடுத்தாக கூறுவது உண்மையில்லை என்றால் சரியல்ல.

3.வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதிக்கொடுப்பதற்கு மேற்படி நபர்களுக்கு

உரிமையில்லை என்றால் சரியல்ல. நல்லப்பரெட்டியர், கணக்கரெட்டியார், மும்மாச்சி ரெட்சியார், ராமசாமி, சுப்பிரமணியன் ஆகியோர்களை எனக்கு நேரடியாக தெரியாது. வா.சா-ஆ.1 ஆவணம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணம் எழுதிக்கொடுத்தாக கூறக்கூடிய நபர்களுக்கு மேற்படி சொத்தானது பாத்தியப்பட்டது என்பதற்கோ, அனுபவம் செய்துவந்தார்கள் என்பதற்கோ, ஆவணங்கள் எதனையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு தாக்கல் செய்ததாக கூறுவது உண்மையில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை எனது தகப்பனார் அனுபவம் செய்துவருதற்காக வா.சா.ஆ.1 ஆவணத்தை தவிர வேறு ஆவணங்கள் உண்டா என்றால் இல்லை.

4. வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வெள்ளைசாமி ரெட்டியார் மகன் ராஜு என்பவரை தெரியுமா என்றால் தெரியும். அவருக்கு தற்காலத்தில் வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் உண்டா என்றால் இல்லை. மேற்படி ராஜு என்பவர் தான் இவ்வழக்கில் கண்ட மூன்றாவது பிரதிவாதியான ஜெயபிரகாஷ் என்பவருக்கு 460/18C-ல் உள்ள நிலத்தை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா-ஆ.2 ஆவணத்தில் கண்டுள்ள ராஜு என்பவர் தான் மேற்படி 460/18C-ல் அனுபவம் செய்துவந்தார். மேற்படி ராஜு என்பவர் தான் அனுபவத்தை ஜெயபிரகாஷ் என்பவருக்கு கொடுத்தார் என்றால் 460/18C-ல் எங்களது அனுபவத்தில் உள்ளது, 460/18C-ன் பட்டா மட்டும் ராஜு என்பவருக்கு மாறிவிட்டது. மேற்படி 460/18C-ல் உள்ள நிலம் 460/18-ல் தென் கோடியில் உள்ளது. 460/18B-ல் உள்ள நிலம் வடபுறம் உள்ள பூமி துரைசாமிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 460/18B நிலத்திற்கு பெருமாள் நிலம் உள்ளதா என்றால் பெருமாள் நிலமா அல்லது துரைசாமி நிலமா என்று தெரியாது. எனது உடன்பிறந்தவர் ஒரு அக்கா. வழக்கு சொத்து உள்ள கிராமத்தில் எங்களுக்கு பூர்விக சொத்துக்கள் உள்ளதா என்றால் உள்ளது. வா.சா.ஆ.3 ஆவணம் எனது தகப்பனார் எழுதி வைத்த ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா-ஆ.3 ஆவணத்தின் படி தாவா சொத்தில் எவ்வித உரிமையும் எனக்கு கிடைக்காது என்றாலும் தாவா சொத்துக்களில் எனது தகப்பனாருக்கு எவ்வித உரிமையும் எழாது என்றால் சரியல்ல.

5.எஜ்ஜம்மாள் என்பவர் ராமசாமி என்பவருக்கும் வேலாச்சி என்பவருக்கும் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தின் நகலை நான் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. எனது தகப்பனார் எக்காலத்திலும் தாவா சொத்துகளை அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா-ஆ.2 ஆவணம் 1799 எண் கொண்ட பட்டா மட்டும் தான் என்றாலும், 2107க்குரியது அல்ல என்றால் சரிதான். நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை அபகரிக்கவேண்டும் என பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.